## எண்ணாகமம் 6:24-26

ஆண்டவர் உன்னை ஆசீர் வதித்துக் காப்பாற்றுவாராக! (சர்வப். 36:19). கர்த்தர் உனக்குத் தம்முடைய திருமுகத்தைக் காண்பித்து உன்மேல் கிருபையாயிருப்பாராக. கர்த்தர் உன் மேலே தம்மு டைய திருமுகத்தைத் திருப்பி உனக் குச் சமாதானம் கட்டளையிடுவா ராக என்பதாம்.

## அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 16:33

என்மட்டில் நீங்கள் சமாதானத்தைக் கொண்டிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். இவ்வுலகத்தில் உங்களுக்கு நெருக்கிடை உண்டாகும்; ஆயினும் திடமாயிருங்கள். நான் உலகத்தை ஷெஜயித்தேன் என்று திருவுளம்பற்றினார். (அரு. 14:27.)

## அர்ச். மத்தேயு சுவிசேஷம் 5:9

சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்: ஏனெனில் அவர்கள் தேவ மக்கள் என்னப்படுவார்கள்.

## அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 14:27

சமாதானத்தை உங்களுக்கு வைத் துவிட்டுப் போகிறேன்; என் சமாதானத் தை உங்களுக்குத் தருகிறேன். உலகம் கொடுக்கிறதைப்போல நான் (அதைக்) கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும், அஞ்சாமலும் இருப்பதாக.

## இராயப்பர் பொது நிருபம் 1 3:10-11

ஏனெனில், ஷஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணும்படி ஆசிக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடமான பேச்சுகளுக்குத் தன் உதடுகளையும் அடக்கி, (சங். 33:13, 14.) தின்மைக்கு விலகி, நன்மையைச் செய்து, சமாதானத்தை நாடி அதைப் பின்பற்றுவானாக. (இசை. 1:16.)

## சங்கீதங்கள் 4:8

நானோவெனில் சமாதானத் தில் நித்திரை செய்து இளைப்பாறு வேன்.

## கொலோசியர் 3:13

ஒருவரொருவரைத் தாங்கி, எவ னுக்காவது மற்றொருவன்மேல் முறைப் பாடிருந்தால், அதைப் பொறுத்துக் கொண்டு, ஆண்டவர் உங்களை மன்னித் ததுபோல் நீங்களும் உங்களுக்குள் ஒருவ ரொருவரை மன்னித்துக்கொள்ளுங்கள்.

கொலோசியர் 3:15

கிறீஸ்துநாதருடைய சமாதானம் உங்கள் இருதயங்களில் சந்தோஷ அக்களிப்புக்கொள்ளட்டும். இதற்கா கவே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப் பட்டிருக்கிறீர்கள். இதற்காக நன்றியறிந் திருங்கள்.

இசாயாஸ் ஆகமம் 26:3

உள்ளபடி, பழமையான அபத் தம் ஒழிந்தது; ஆண்டவரே நீர் தந்த சமாதானத்தைக் காப்பாற்றுவீர். உமது பேரில் நம்பிக்கை கொண்ட தால் சமாதானத்தைக் காத்து வருவீர்.

பிலிப்பியர் 4:6-7

எதன்பேரிலும் கவலைப்படாதிருங்கள். ஆனால் எல்லா ஷெஜபத்திலும், வேண்டுதலிலும், நன்றியறிந்த ஸ்தோத் திரத்தோடுகூடிய உங்கள் மன்றாட்டுகள் தேவசமுகத்தில் தெரியவரக்கடவது. அப்படியே எல்லா அறிவை யுங் கடந்த சர்வேசுரனுடைய சமா தானமானது உங்கள் இருதயங்களை யும் உங்கள் சிந்தைகளையும் சேசுக் கிறீஸ்துவுக்குள் காப்பாற்றுவதாக.

இயாகப்பர் பொது நிருபம் 3:18

நீதியாகிய கனியானது சமாதானத்தை உண்டாக்குகிறவர்களால் சமாதானத்திலே விதைக்கப்படுகின்றது. (இசை. 32:17; மத். 5:9.)

பழமொழியாகமம் 16:32

வல்லவனை விடப் பொறுமை சாலி உத்தமன்; நகரங்களை முற்றிக் கையிட்டவனைவிடத் தன் மனதை ஆய்பவன் உத்தமன்.

யூதா எழுதிய நிருபம் 1:2

கிருபையும், சமாதானமும், பரம அன்பும் உங்களுக்குப் பூரணமாய் உண்டாவதாக.

தெசலோனிக்கேயர் 2 3:16

சமாதான கர்த்தர் எவ்விடத்திலும் உங்களுக்கு முடிவில்லாத சமாதானத்தைத் தந்தருளுவாராக. கர்த்தர் உங்கள் அனைவரோடுங் கூட இருப்பாராக.

எபேசியர் 4:3

சமாதான பந்தனத்தில் மன ஒற்றுமையை ஷஜாக்கிரதையாய்க் காப்பாற்றிக்கொள்ளுங்கள். (உரோ. 12:10.)

எபிரேயருக்கு எழுதிய நிருபம் 12:14

சமஸ்தரோடும் சமாதானத்தையும் பரிசுத்ததனத்தையும் நாடுங்கள். பரிசுத் தமில்லாமல் சர்வேசுரனை ஒருவனும் தரிசிக்கமாட்டான். (உரோ. 12:18.)

சங்கீதங்கள் 34:14

நான் (ஒவ்வொருவனை) என் உறவினனைப் போலவும், சகோதர னைப் போலவும் பாவித்து நடந்து (அவர்களுக்காகத்) துக்கித்துப் பிரலாபித்து இப்படியே கஸ்திப் பட்டுக்கொண்டிருந்தேன்.

இயாகப்பர் பொது நிருபம் 3:17

மேலாவிலிருந்து வருகிற ஞானமோ முந்தமுந்தக் கற்புள்ளதும், பின்னும் சமாதானமுள்ளதும், மரியா தையுள்ளதும், இணக்கமுள்ளதும், நல்லவைகளுக்கு உடந்தையுள்ளதும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததுமாயிருக்கின்றது. அது யாதொன் றுக்கும் தீர்ப்பிடுகிறதுமில்லை, பாசாங்கு பண்ணுகிறதுமில்லை.

இசாயாஸ் ஆகமம் 52:7

பர்வதங்கள்மீது சமாதானத் தைப் போதித்தும் சுவிசேஷத்தை அறிவித்தும், இரட்சணியத்தைத் தெரிவித்தும், சியோனைப் பார்த்து: உன் தேவன் உன்மீது இராஷஜரீகம் நடத்துவர் எனச் சொல்லியும் வரும் பிரசங்கிகளுடைய பாதாரங்கள் எவ்வளவோ அழகு வாய்ந்தவனவா யிருக்கின்றன (நாகூம்.1:15; உரோ. 10:15).

பிலிப்பியர் 4:9

நீங்கள் என்னிடத்தில் எவைகளைக் கற்றும், பெற்றும், கேட்டும், கண்டுமிருக்கிறீர்களோ, அவைகளை யே செய்யுங்கள். அப்போது சமாதா னக் கடவுள் உங்களோடிருப்பார்.

எபிரேயருக்கு எழுதிய நிருபம் 12:11

ஆகிலும் எந்தத் தண்டனை யும் தற்காலத்தில் சந்தோஷமாகத் தோன்றாமல் துக்கமாகத் தோன்றும். ஆனால் அதில் பழகிப்போனவர்களுக்குப் பின்னால் அது மிகுந்த சமாதானத்துக் குரிய நீதிப்பலனைப் பெறுவிக்கும். மூ 11. துன்பங்களில் கிறீஸ்துவனுக்கு ஆறுதல் வருவிக்கக்கூடிய ஐந்து பிரதான முகாந் தரங்கள் உண்டு. மூ 1-வது. அந்தத் துன்பங்களுக்குச் சர்வேசுரன் தாம் பட்சமுள்ள தகப்பனைப்போல் காரணமாயிருக்கிறார். மூ 2-வது. சர்வேசுரன் நமக்கு அனுப்புகிற துன்பங்கள் அவருடைய பட்சத்தின் அத்தாட்சிகளாயிருக்கின்றன. மூ 3-வது. சர்வேசுரனுக்குப் பிரியமான பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டோ மென்பதற்கு அவைகள் அத்தாட்சிகளாயிருக்கின்றன. மூ 4-வது. நாம் சர்வேசுரனுக்குப் பிள்ளைகளாய் இருக்கிறபடியினாலே துன்பங்கள் அவசியமாய் நமக்கு வரவேண்டியது. இல்லாவிட்டால் சர்வேசுரனுக்கு நாம் பிள்ளைகளாய் இருக்கமாட்டோம். சர்வேசுரன் நம்மைத் தம்முடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளாமல் நம்மை விபசாரத்தின் பிள்ளைகள்போல் எண்ணித் தள்ளுவார். மூ 5-வது. துன்பங்கள் தற்காலத்திலே கசப்பாய்த் தோன்றினாலும் பிற்பாடு நித்தியமான சந்தோஷத்துக்குக் காரணமாயிருக்கின்றன.

பழமொழியாகமம் 20:3

சச்சரவுகளுக்குட்படாமல் இருப்பது மனிதனுக்கு மகிமையாம்; ஆனால் மதியீனர் அனைவரும் சச்சரவுகளில் கலந்துகொள்ளு கிறார்கள்.

சங்கீதங்கள் 119:165

உரோமாபுரியார் 1 8:6

மாம்ச சிந்தை மரணமாம். ஞானத்தின் சிந்தையோ சீவியமும், சமாதானமுமாம்.

சங்கீதங்கள் 46:10